# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 02.12.2011 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

முஸ்லிம்களில் ஒரு பிரிவினர் குழப்பத்தை விளைவிக்கக் கூடிய பெயர் தாங்கிய உலமாக்களின் பின்னால் சென்றவாறு, எந்த விதத்திலும் சிந்திக்காமல் அஹ்மதிய்யத்தை எதிர்க்கின்றனர். ஆனால் பெரும்பான்மையோர் மார்க்கத்தைச் சாராதவர்களாக உள்ளனர். இவர்கள் பெருநாள் தொழுகை மட்டும் தொழுது கொள்வார்கள். இன்னும் சிலர், மார்க்கத்தில் எவ்வித கட்டாயத்தையும் விரும்பாதவர்களாக இருந்தபோதிலும் உலமாக்கள் தரப்பிலிருந்து கூறப்படும் குஃப்ர் ஃபத்வாக்களுக்கு அஞ்சியவர்களாக அமைதியாக உள்ளனர். ஆனால் சிலர் இவ்வாறும் இருக்கின்றனர். அவர்கள் இஸ்லாத்தின் அறிவைப் பெற்றிருக்கவில்லை. ஆனால் அந்நியர்கள் இஸ்லாம் மற்றும் முஸ்லிம்களின் மீது விரலை உயர்த்தும் போது, ஆட்சேபனை செய்யும் போது அதனை எப்படியாவது தடுக்க வேண்டும்; அவர்களுக்கு பதில் அளிக்க வேண்டும்; அவர்களின் வாயை அடைக்க வேண்டும் என்ற ஆசை அவர்களிடம் உள்ளது. மேலும் இவர்களது ஆசை என்னவென்றால், இஸ்லாத்தின் அனைத்துப் பிரிவுகளும் ஒன்றிணைந்து இஸ்லாத்தின் எதிரிகளை, தஜ்ஜாலிய சக்திகளை எதிர்க்க வேண்டும் என்பதாகும். இவ்வாறான மக்கள், பாகிஸ்தான் மற்றும் இந்தியாவில் வசிக்கக்கூடிய முஸ்லிம்களிலும் உள்ளனர். மற்ற நாடுகளில் வசித்து வரும் முஸ்லிம்களிலும் உள்ளனர். இவர்கள் இஸ்லாத்தை, இஸ்லாம் என்னும் பெயரைக் கொண்டு அறிய விரும்புகின்றனரே தவிர பிரிவின் பெயரைக் கொண்டு அறிய விரும்புவதில்லை. அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மீதும் இவ்வாறான ஆட்சேபனை செய்யப்படுகிறது.

மேலும் பல்வேறு சந்தர்ப்பங்களில் கேள்விகளும் எழுகின்றன. அதாவது, முன்பு இஸ்லாத்தில் பிரிவுகள் குறைவாக இருந்ததா என்ன? நீங்களும் ஒரு பிரிவைத்தான் உருவாக்கியுள்ளீர்கள் என்று நம்மிடம் கூறுகின்றனர். நீங்கள் இஸ்லாத்தின் அனுதாபி என்றால் முஸ்லிம்களுக்கு பிரிவினையிலிருந்து விடுதலை பெற்றுத்தர முயற்சி செய்யுங்கள். முதலில் நான் இவ்வாறு கேள்வி கேட்பவருக்கு நன்றி கூறிக் கொள்கிறேன். அவர்கள் குறைந்தபட்சம் நம்மை முஸ்லிம் என்று புரிந்திருக்கின்றார்கள். முஸ்லிம்களின் ஒரு பிரிவினர் என்று கருதுகின்றனர். சற்றும் சிந்திக்காமல் குஃப்ர் ஃபத்வா கொடுக்கவில்லை. இவ்வாறான மக்களை நோக்கி நான் கூறிக்கொள்வது என்னவென்றால், அல்லாஹ் முஸ்லிம் உம்மத்தின் மீது கருணை காட்டியவாறு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பிற்கேற்பவும், வாக்களித்ததற்கு ஏற்பவும் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களை மஸீஹ் மவ்வூது ஆகவும், மஹ்தி மஃஹுது ஆகவும் அனுப்பியதன் காரணம் பிரிவினையை ஒழிப்பதற்கே ஆகும். அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணைகின்ற முஸ்லிம்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் ஸலாத்தை மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு எட்ட வைக்கின்றனர். அவர்கள் பல்வேறு பிரிவிலிருந்து வந்து பிரிவினையை ஒழித்தவாறு உண்மையான இஸ்லாத்தின் போதனையின்படி செயல்படவே அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணைகின்றனர். அல்லாஹ் இவர்கள் மீது அருள் புரிந்தவாறு இவர்களின் பார்வையினை திறந்துள்ளான். இதனால் இவர்கள் பிரிவினைகளுக்கு விடை கொடுத்தவாறு உண்மையான இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டுள்ளனர்.

எவர் சம்பந்தமாக ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் முன்னறிவித்தார்களோ அந்த நீதியுடன் தீர்ப்பு வழங்குபவரின் பைஅத்தில் வந்துள்ளனர். இதன் மூலம் இஸ்லாமிய பிரிவில் இடம் பெற்றுள்ள தவறான போதனைகள், பித்அத்துகள் இவை அனைத்தையும் உண்மை இஸ்லாத்தின் போதனையைக் கொண்டு அடையாளம் கண்டு கொள்ள முடியும். மேலும் திருக்குர்ஆனின் உண்மையான போதனையை மேற்கொள்ள வேண்டும். அதன்படி செயல்பட வேண்டும். இது அல்லாஹ் அனுப்பியவரின் உண்மையான போதனைகள் மற்றும் தர்பிய்யத்தின் தாக்கத்தினால்தான் அஹ்மதிய்யா ஜமாஅத் அல்லாஹ் மற்றும் அவனது தூதரின்

கூற்றுக்கிணங்க கலிமா சொல்லக்கூடிய ஒவ்வொருவரும் முஸ்லிம் ஆவார் என்று ஏற்றுக் கொள்கிறது. ஒருவர் முஸ்லிம் ஆவதற்கு இதுவே போதுமானதாகும். அதாவது அவர் லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் என்பதை ஏற்றுக் கொண்டால் போதும். இதுதான் ஹதீஸிலிருந்து நிரூபணமாகிறது. ஆனால் இதற்கு நேர் எதிராக மற்ற பிரிவினர்களைப் பாருங்கள். ஒருவர் மற்றவரைக் குறித்து குஃப்ர் ஃபத்வாவை வழங்குகின்றனர்.

எனவே இஸ்லாத்தை நேசிப்பவர்களின் இந்த தவறான சிந்தனை அதாவது இஸ்லாமிய சமுதாயம் முதலிலேயே பிரிவினையில் பிறந்துள்ளது. இதில் அஹ்மதிய்யா ஜமாஅத் இன்னொரு பிரிவிற்கு அடிக்கல் நாட்டி குழப்பம் செய்கிறது என்ற இவர்களின் இந்தக் கூற்று திருக்குர்ஆனின் போதனையினை அறிவதில் குறைபாடு இருப்பதற்கான அடையாளமாகும். எந்தவொரு பிரிவின் நூல்களைப் படித்துப் பாருங்கள். அதில் ஒருவர் மற்றவரைக் குறித்துக் கூறிய குஃப்ர் ஃபத்வாக்களின் குவியல் தென்படும். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் நூல்களைப் படித்துப் பார்த்தால் அதில் மாற்று மதத்தினரின் எதிர்ப்புகளை எதிர்க்கும் கருத்துக்கள்தான் தென்படும் அல்லது குஃப்ர் ஃபத்வாவை விட்டு அகன்று விடுங்கள்; இஸ்லாத்தின் தொண்டிற்காக உறுதியோடு நில்லுங்கள் என்று உலமாக்களுக்கு கூறப்பட்ட போதனைகள் தென்படும். அல்லது ஹுகூகுல்லாஹ் மற்றும் ஹுகூகுல் இபாதினை சரியாக பேணி வர நாம் என்ன செய்ய வேண்டும். அல்லது உலகத்தில் அன்பு, நேசம், சமாதானம், நேர்மை ஆகியவற்றை நிலைநாட்ட நாம் என்ன செய்ய வேண்டும்? வெறுப்பின் தீயினை எவ்வாறு அணைக்க வேண்டும்? என்பதை வலியுறுத்திக் கூறிய விஷயங்கள் தென்படும். அல்லது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் தோழர்களின் உயர்ந்த தகுதிகள் எவ்வாறு இருந்தது என்ற விஷயங்கள் தென்படும். அவர்களில் ஒவ்வொருவரும் ஒளிவீசும் நட்சத்திரங்கள் ஆவர். அவை ஒவ்வொன்றும் பின்பற்றத் தகுந்தவையாகும். ஒவ்வொருவருக்கும் ஓர் அந்தஸ்து உள்ளது.

எனவே அஹ்மதிய்யா ஜமாஅத்தின் நூல்களில் இவ்வாறான அழகிய போதனைகள் தென்படும். மாறாக குஃப்ர் ஃபத்வாக்கள் காணப்படாது. நான் கூறியது போன்று, அதாவது பிரிவினையின் எந்த நூல்களை நீங்கள் எடுத்தாலும் அதில் ஒருவர் மற்றவரை குறித்துக் கூறிய குஃப்ர் ஃபத்வாக்களின் குவியல் இருப்பது தென்படும். நான் மேலே கூறிய இறுதி விஷயம் சஹாபாக்களின் அந்தஸ்து என்ன? என்பது பற்றியதாகும். அதனை நான் இப்போது எடுத்துக் கூறுகிறேன்.

நாம் பார்த்தோமென்றால் இஸ்லாத்தில் இரண்டு மிகப்பெரிய பிரிவுகள் உள்ளன. இதற்கு கீழ் பல்வேறு பிரிவுகள் இருக்கின்றன. அது ஷியா மற்றும் சுன்னி ஆகும். இவ்விருவரும் மிகைப்படுத்துதல் மற்றும் அநீதியின் உதவியினால் இந்த சஹாபாக்களின் அந்தஸ்தினை குறைப்பதற்கும் தயங்கவில்லை. இந்த சஹாபாக்கள் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் ஆரம்ப காலகட்டத்தில் எண்ணற்ற தியாகங்களைச் செய்துள்ளனர். இந்த மிகைப்படுத்துதல் மற்றும் குழப்பத்தினால் ஒருவர் மற்றவர் மீது குஃப்ர் ஃபத்வா கொடுக்கின்றனர்; அவ்வாறு கொடுத்துக் கொண்டே செல்கின்றனர். ஆனால் ஒருவர் ஹஸ்ரத் அலி (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி) அவர்களது அந்தஸ்தை மிகைப்படுத்திக் கூறியிருக்கிறார் என்றால், மற்றவர் சில சஹாபாக்கள் மற்றும் குலஃபாயே ராஷிதீனின் அந்தஸ்த்தை அதிக அநீதியிழைத்தவாறு தாழ்த்துவதற்கு முயற்சி செய்துள்ளார். எனவே மற்றவரும் கூட அவருக்கு பதில் தருவதில் எவ்வித குறைபாடும் வைக்கவில்லை. பிறகு இந்த இரண்டு பிரிவுக்குள் இன்னும் அதிக பிரிவினைகள் உள்ளன. இந்த பிரிவினர்கள் மேலும் ஒரு குழப்பத்தை பரப்பியுள்ளனர்.

எனவே, நவூதுபில்லாஹ் இஸ்லாம் குழப்பத்தை விளைவிக்கக் கூடியதும் குஃப்ர் ஃபத்வா கொடுக்கக்கூடியதும்தான் என்பதை நிரூபிப்பது இவர்களது குறிக்கோளாகும் என தெரிகிறது. ஆனால் நான் தற்போது கூறியது போன்று அஹ்மதிய்யா ஜமாஅத்தின் குறிக்கோளானது ஓர் அழகிய குறிக்கோளாகும். இஸ்லாத்தின் அழகு மற்றும் அதன் அழகிய வடிவத்தை எடுத்துக் கூறுவதுதான் அதன் குறிக்கோளாகும். எனவே இவ்வாறான பிரிவுகளைப் போன்று இந்த ஜமாஅத்தை கருதுவது அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மீது இழைக்கப்படும் அநீதியாகும். இன்றைய நாட்களில் நாம் முஹர்ரம் மாதத்தினை கடந்து கொண்டிருக்கின்றோம். மேலும் எல்லா வருடமும் இந்த மாதத்தை கடந்து செல்கின்றோம். எந்த நாட்டில் சுன்னி

மற்றும் ஷியாக்களின் எண்ணிக்கை அதிகம் உள்ளதோ அங்கு முஹர்ரம் மாதத்தில் இரு தரப்பினரின் உயிர் மற்றும் பொருள் இழப்புகளின் காட்சியினைக் காண முடிகிறது. பாகிஸ்தானாக இருந்தாலும் சரி, அல்லது ஈராக் ஆக இருந்தாலும் சரி அல்லது வேறு எந்த நாடாக இருந்தாலும் சரி அங்கு ஒவ்வொரு வருடமும் முஹர்ரமில் குழப்பம் நிலவுவதை நாம் காண்கின்றோம். உயிர் மற்றும் பொருள் சேதம் ஏற்படுகிறது. தற்போது இது நாள்தோறும் நடந்து வரும் சேதமாக இவர்களுக்கு ஆகிவிட்டது. எனினும் முஹர்ரம் மாதத்தில் குறிப்பாக அதிகமாக நிகழ்கின்றது. நான் கூறியது போன்று இவர்கள் ஒருவர் மற்றவர் மீது குஃப்ர் ஃபத்வாவின் குவியலைக் குவித்துள்ளனர். நான் பார்க்கும் போது பல சான்றுகள் திரண்டு விட்டன. எந்த அளவுக்கு இவர்களின் குஃப்ர் ஃபத்வாக்கள் மற்றும் தீய வார்த்தைகள் உள்ளதென்றால் அதனை நான் இங்கு உதாரணமாகக் கூட கூற விரும்பவில்லை.

இன்று நான் இக்காலத்தின் நீதியுடன் தீர்ப்பு வழங்குபவராகிய ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், குலஃபாயே ராஷிதீன், சஹாபாக்கள், இமாம் ஹுஸைன், (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களைப் பற்றி கூறிய ஞானம் நிறைந்த கருத்துக்களை மட்டும் எடுத்துக் கூறுவேன். இதன் மூலம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எவ்வாறு குழப்பத்தின் அடித்தளத்தை தகர்த்தெறிய முயற்சி செய்துள்ளார்கள் என்பது புலப்படும்.

நான் மேற்கோள்களைச் சேகரித்த போது அவை பல நூற்றுக்கணக்கான பக்கங்களைக் கொண்டதாக ஆகிவிட்டன. ஆனால் நேரத்திற்கேற்ப இப்போது நான் உங்களுக்கு சிலவற்றை கூறுகின்றேன்.

அஹ்மதிய்யத்தில் இணைகின்றவரும், இதுவரை தர்பிய்யத்தை சரியாகப் பெறாதவர்களும் இந்த மேற்கோள்களைக் கேட்பது அவசியமாகும். நான் சிலரின் உதாரணத்தை எடுத்துக் கூறினேன். அவர்கள் சில நேரங்களில் M.T.A. பார்க்கின்றனர். குத்பாவை கேட்கின்றனர். மேலும் ஜமாஅத்துடன் ஆர்வத்துடன் உள்ளனர். அல்லது இவர்களுக்கு இஸ்லாத்தின் மீது அனுதாபம் உள்ளது. ஆனால் இவர்களின் சிந்தனையில் ஒரு கேள்வி எழுகிறது. அதாவது அஹ்மதிய்யா ஜமாஅத்தும் மற்ற பிரிவைப் போன்றே ஒரு பிரிவாகும் என்று கருதுகின்றனர். இவர்களுக்கு முன் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மேற்கோள்கள் வந்தால் அன்னார் இஸ்லாத்தின் அனைத்து பிரிவுகளையும் ஒன்றுபடுத்தவே வந்தார்கள் என்பது தெரிய வரும். மேலும் அனைத்து வகையான அநீதிகளிலிருந்து தூய்மைப்படுத்தவே வந்துள்ளார்கள் என்பது தெரிய வரும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு அல்லாஹ் முஸ்லிம்களை ஒன்றுபடுத்துவதன் பொறுப்பை ஒப்படைத்து இவ்வாறு இல்ஹாம் மூலம் அறிவித்தான்.

இப்பூமியில் இருக்கும் எல்லா முஸ்லிம்களையும் ஒரே மார்க்கத்தில் ஒன்றுசேர்ப்பீராக.

எனவே அன்னார் பிரிவுகளை ஒழிக்கவே வருகை தந்துள்ளார்கள். அனைத்து முஸ்லிம்களையும் ஒரே கையில் ஒன்றுசேர்ப்பதற்காக வந்துள்ளார்கள். எனவே இந்த வகையில் நான் கூறியது போன்று ஒரு சில மேற்கோள்களை எடுத்து வைப்பேன். முதலில் நான் சஹாபாக்களின் வழியைப் பின்பற்றுவது மூஃமின் மற்றும் முஸ்லிம் ஆவதற்கான அடையாளமாகும் என்று கூறிய ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மேற்கோள்களை எடுத்துக் கூறுகிறேன்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

எவர் ஒருவர் ஹஸ்ரத் அபூபக்கர், ஹஸ்ரத் உமர், ஹஸ்ரத் உஸ்மான், ஹஸ்ரத் அலி (ரிழ்வானுல்லாஹி அலைஹிம்) அவர்களின் பண்புகளை தனக்குள் உருவாக்கிக் கொள்ளாத வரை மூஃமின், முஸ்லிம் ஆக முடியாது என்பது எனது கொள்கையாகும். அவர்களோ உலகத்தை நேசிக்கவில்லை. அவர்கள் தமது வாழ்வை இறைவழியில் தியாகம் செய்திருந்தனர். பிறகு குலஃபாயே ராஷிதீனின் அந்தஸ்து சம்பந்தமாக பிரிதோர் இடத்தில் சிர்ருல் கிலாஃபா என்ற நூலில் பக்கம் 328-ல் அன்னார் கூறுகின்றார்கள். நான் புத்தகத்தின் பக்கத்தினை கூறுவதற்கு காரணம் இது ஒரு அரபி நூலாகும். எனவே அரபிகள் இதனை மொழியாக்கம் செய்வதற்கு எளிதாக இருக்கும் என்பதற்காக பக்கத்தைக் கூறியுள்ளேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் அசல் வார்த்தைகள் அரபிகள் முன்பு வந்தால் அதிக தாக்கத்தை உருவாக்கும்.

ஏனென்றால் மொழியாக்கம் செய்பவர்களுக்கு நன்கு அரபி தெரிந்திருந்தாலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எந்த தரத்தில் கூறியுள்ளார்களோ அதனை அவரால் அடைய முடியாது. எவ்வாறிருந்தபோதிலும் அன்னார் கூறுகின்றார்கள்:

இறைவனின் இந்த கண்ணியத்திற்குரிய கலீஃபாக்கள் உலகத்தின் தலைவர் (ஸல்) அவர்களுக்கு உதவுவதில் மரணத்தின் நுழைவாயிலுக்கு செல்லவும் தயங்கவில்லை. இறைவனுக்காக தமது பெற்றோர்கள், சந்ததிகள் ஆகியோரை விட்டு விடுவதையும், அவர்களுடன் உள்ள தொடர்பை துண்டித்து விடுவதையும் தாங்கிக் கொண்டார்கள். அவர்கள் தமது நண்பர்களுடன் சண்டையிட்டுக் கொண்டனர். இறைவனுக்காக தமது பொருள் மற்றும் உயிரினை தியாகம் செய்து விட்டார்கள். இவ்வளவு செய்திருந்தும் அவர்கள் தாம் செய்ய வேண்டிய முறையில் உரிமைகளை நல் அமல்களை செய்ய முடியவில்லை என்றே ஆதங்கம் கொண்டனர். கண்கள் எப்போதும் அந்த ஏகத்துவத்தின் கனவின் சுவையில் விழித்திருந்தது. மேலும் தனது நஃப்ஸின் இளைப்பாறுதலுக்கான எந்த கவலையும் இருந்ததில்லை. அந்த உடல் ஆபத்துகளை சகித்துக் கொள்ளக் கூடியதாக இருந்தது.

இவர்கள் அநீதியாளர்கள், உள்ளத்தை பிளவுபடுத்துபவர்கள், கொடுமை இழைப்பவர்கள் என்று எதைக் கொண்டு நீங்கள் கூறுகிறீர்கள்? உண்மை என்னவென்றால் இவர்களைக் குறித்து இது நிரூபணமாகி உள்ளது. அதாவது அவர்கள் பேராசை கொண்ட அடியானாக இருந்ததில்லை. மாறாக இறை சன்னிதியில் வீழ்ந்தே கிடந்தார்கள். இறைவனிடம் தம்மை மாய்த்துக் கொண்ட சமுதாயம் இவர்களே ஆவார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:**

இந்த குலஃபாயே ராஷிதீன், ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களுக்காகவும், இஸ்லாத்திற்காகவும் அனைத்தையும் தியாகம் செய்து விட்டனர். மேலும் இறைவனிடம் தம்மை மாய்த்துக் கொண்டனர். பிறகு சிர்ருல் கிலாஃபா என்ற அதே நூலின் 355வது பக்கத்தில் அன்னார் ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் சம்பந்தமாக கூறுகின்றார்கள்:

அவர் முழு ஞானத்தைப் பெற்ற இறைவனின் அடியாராகவும் மென்மை மற்றும் கருணையின் இயல்பைக் கொண்டவராகவும் திகழ்ந்தார். அன்னார் தன்னடக்கத்துடன் முழு வாழ்விலும் ஏழ்மையாகவே வாழ்ந்து வந்தார்கள். மிக அதிகமாக மன்னித்தல் மற்றும் நேச மனப்பான்மை கொண்டவராகவும் கருணை காட்டுபவராகவும் தமது நெற்றியின் ஒளியினால் கண்டறியப்பட்டார்கள். அன்னாருக்கு முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களுடன் ஆழ்ந்த தொடர்பு இருந்தது. மேலும் அன்னாரின் ஆன்மா படைப்பினங்களிலேயே மிகச் சிறந்தவரின் ஆன்மாவுடன் இணைந்திருந்தது. மேலும் எந்த ஒளியினைக் கொண்டு அவர்களின் வழிகாட்டி மற்றும் இறை நேசர் மூடப்பட்டாரோ அந்த ஒளியினைக் கொண்டு அவர்களும் மூடப்பட்டார்கள். மேலும் ரஸூலே கரீம் (ஸல்) அவர்களின் மெய்யறிவின் ஒளியின் கீழ், அன்னாரின் உண்மையான அருள்களின் கீழ் மூடப்பட்டார்கள். அன்னார் மனித குலத்தின் பெருமையாகத் திகழும் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் மீது வைத்திருந்த அன்பு மற்றவர்களை விட உயர்ந்ததாக இருந்தது.

மேலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் இறை அறிவிப்பு வெளிப்பட்ட போது இறை அறிவிப்புகள் வந்த போது ஹஸ்ரத் அபுபக்கர் (ரலி) அவர்கள் அனைத்து உலகத் தொடர்புகளையும் துண்டித்து விட்டார்கள். மேலும் பௌதீக தொடர்புகளை முறித்து எறிந்தார்கள். தனது நேசமிக்கவரின் பணியை மேற்கொண்டவாறு இறைவனுக்காக அனைத்து வகையான ஆசைகளையும் விட்டு விட்டார்கள். மேலும் அன்னாரின் ஆன்மா தூயதாகவும், உலகியல் காழ்ப்புணர்ச்சியை விட்டு நீங்கியதாகவும் இருந்தது. அவர்கள் முற்றிலும் தம்மை உண்மை இறைவனுடன் மாய்த்துக் கொண்டார்கள். ரப்புல் ஆலமீனின் திருப்தியில் மறைந்து விட்டார்கள். இறைவன் மீதான உண்மையான நேசம் அன்னாரின் இயல்பிலும் அன்னாரின் உள்ளத்தின் ஆழத்திலும் அவர்களது உடலின் ஒவ்வொரு துகளிலும் இரண்டறக் கலந்த போது, அவர்களது சொற்களிலும், செயல்களிலும் மற்றும் நிற்பதிலும், உட்காருவதிலும் இது வெளிப்பட்டது. அப்போது அன்னாருக்கு ஸித்தீக் என்ற பட்டம் வழங்கப்பட்டது. அதாவது எப்போது முழுமையான முறையில் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள்

மீது தன்னை மாய்த்துக் கொண்டார்களோ அப்போது அன்னாருக்கு ஸித்தீக் என்ற பட்டம் கொடுக்கப்பட்டது. இதுதான் அன்னாரின் அந்தஸ்து ஆகும்.

ஹஸ்ரத் அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்களின் ஸித்தீக்கிய்யத் என்ற அந்தஸ்த்தை மேலும் விளக்கிக் கூறியவாறு **ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களுக்கு ஸித்தீக் என்ற பட்டத்தை வழங்கிய போது அன்னாரிடம் என்னென்ன ஆற்றல்கள் இருந்தன என்பதை இறைவனே அறிவான். ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்கள் இவ்வாறும் கூறினார்கள்:

ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களுக்கு அவர்களின் உள்ளத்தில் இருக்கக்கூடிய விஷயத்திற்காகவே இந்த அருட்கொடை வழங்கப்பட்டது. ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தோம் என்றால் ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் காட்டித்தந்த அந்த நேர்மைக்கு மேலும் உதாரணங்கள் கிடைப்பது கடினமாகும். உண்மை என்னவென்றால், ஒவ்வொரு காலத்திலும் எவரொருவர் ஸித்தீக்கின் ஆற்றலைப் பெற விரும்புகின்றாரோ அவர் அபூபக்கரின் நடத்தை மற்றும் இயல்பினை தன்னுள் உருவாக்க வேண்டும் என்பதற்காக எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவு முயற்சி செய்ய வேண்டும். பிறகு ஏற்றுக் கொள்ளும் வரை துஆ செய்யவும் வேண்டும். எதுவரை தம்மீது ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களின் சாயலை உருவாக்குவதில்லையோ, அதனைப் போன்று ஆகி விடுவதில்லையோ அதுவரை ஸித்தீக்கின் ஆற்றல்களைப் பெற இயலாது.

**கூறுகின்றார்கள்**: அபூபக்கரின் இயல்பு என்றால் என்ன? இதனை விரிவுபடுத்திக் கூறுவதற்கான எந்த சந்தர்ப்பமும் இல்லை. ஏனென்றால் இதனைக் குறித்துக் கூறுவதற்கு பல நேரங்கள் தேவைப்படுகின்றன. எனவே நான் ஒரே ஒரு சம்பவத்தை மட்டும் கூறி விடுகின்றேன். அதாவது ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்களின் நுபுவ்வத்தை வெளிப்படுத்தியபோது ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் வியாபார நிமித்தமாக சிரியா சென்றிருந்தார்கள். திரும்பி வரும் போது வழியில் ஒரு நபர் அன்னாரை சந்தித்தார். அன்னார் அவரிடம் மக்காவின் நிலைமையைக் கேட்டார்கள். புதியதோர் செய்தி இருந்தால் கூறவும் என்று கூறினார்கள். பொதுவாக நடைமுறையில் இருக்கும் விஷயம் என்னவென்றால், மனிதன் தனது பயணத்திலிருந்து திரும்பி வரும் போது தனது நாட்டைச் சேர்ந்தவர் கிடைத்து விட்டால் அவரிடம் நாட்டின் நிலைமையை கேட்டறிவார். அந்த நபர் பதில் கூறினார். உமது தோழர் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் தூதருக்கான வாதம் செய்துள்ளார் என்று கூறினார். ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் இதனைக் கேட்டதுமே அவர் இந்த வாதம் செய்திருந்தால் நிச்சயமாக அவர் எவ்வித சந்தேகமுமின்றி உண்மையாளரே ஆவார். இந்த ஒரு சம்பவத்தின் மூலமே ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்கள் மீது அன்னாருக்கு எந்த அளவுக்கு நல்லெண்ணம் இருந்தது என்பது தெரிய வரும். அற்புதத்தின் அவசியத்தையும் பொருட்படுத்தவில்லை. உண்மையும் இதுவே ஆகும். அற்புதங்களை யார் கேட்பார் என்றால் வாதியின் நிலைமையை அறியாதவர் இன்னும் திருப்தி அடைவதற்கான அவசியம் ஏற்பட்டால் கேட்பார். ஆனால் நிலைமையினை நன்கு அறிந்திருக்கும் ஒருவருக்கு அற்புதங்களின் அவசியம் தேவைப்படுமா என்ன?

எனவே ஹஸ்ரத் அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்கள் வழியிலேயே அன்னாரின் வாதத்தைக் கேட்டு ஏற்றுக் கொண்டார்கள். மக்காவை வந்தடைந்த போது ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்களிடம் சென்று நீங்கள் நுபுவ்வத் வாதம் செய்துள்ளீர்களா? என்று கேட்டார்கள். ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்கள் ஆம் எனக் கூறினார்கள். ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள், நான் உங்களை ஏற்றுக் கொள்வதில் முதன்மை வாய்ந்தவன் என்பதற்கு தாங்கள் சாட்சியாக இருங்கள். அன்னார் இவ்வாறு கூறுவது வெறும் சொல்லளவில் மட்டுமல்ல. அன்னார் இதனை செயல்ரீதியாகவும் நிரூபித்துக் காட்டினார்கள். பிறகு மரணிக்கும் வரை இதனை நிறைவேற்றி வந்தார்கள். பிறகு ஹஸ்ரத் அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்களிடமிருந்து இந்த நேர்மை மற்றும் விசுவாசம் எவ்வாறு வெளிப்பட்டது என்பது பற்றி கூறும்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள். ஒருமுறை சில எதிரிகள் நபி (ஸல்) அவர்களை தனிமையில் பிடித்துக் கொண்டனர். அன்னாரின் கழுத்தில் கச்சையை முறுக்கி வளைத்தார்கள். ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்களின் உயிர் போய் விடும் ஆபத்தில்இருந்தது. தற்செயலாக அங்கு ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் வந்தார்கள். பிறகு அவர்கள்

அதனை மிகவும் கவனத்துடன் விடுவித்தார்கள். இதற்காக அந்த எதிரிகள் ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் மயக்கமடைந்து பூமியில் விழும் அளவிற்கு அடித்தார்கள்.

பிறகு ஹஸ்ரத் அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்கள் உம்மத்தின் மீது காட்டிய மிகப்பெரிய கருணையினைப் பற்றி கூறும்போது **ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இவ்வாறே ஹஸ்ரத் அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்கள் "*முஹம்மது ஒரு தூதர் மட்டுமே ஆவார். அவருக்கு முன் தோன்றிய எல்லா தூதர்களும் மரணமடைந்து விட்டனர்....*(3:45)" என்ற இந்த வசனத்தினை எடுத்துக் கூறியதன் மூலம் நிரூபித்திருப்பது என்னவென்றால் மிகத் தெளிவாக அவர்களது பார்வையில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் மரணமடைந்து விட்டார்கள் என்பதாகும். ஏனென்றால் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களுக்கு முன்பு சிலர் இறந்து விட்டார்கள்; ஆனால் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் காலம் வரை சிலர் மரணமடையவில்லை என்று சொன்னால் மட்டுமே இந்த வசனம் ஆதாரமற்றதாக ஆகிவிடும். ஏனென்றால் ஒரு நிரூபிக்கப்பட்ட நியதியின் அடிப்படையில் அமையாத ஒரு முழுமை பெறாத ஆதாரம் ஆகும். முன்சென்று போன அனைவரையும், உள்ளடக்காமல் இருந்தால் அதனை ஆதாரம் என்று அழைக்க முடியாது. இதனால் ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களின் கூற்று வீணானதாகி விடும். நினைவில் கொள்ளுங்கள். இந்த வசனத்தை ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் அனைத்து நபிமார்களின் மரணத்திற்காக எடுத்து வைக்கும் போது எந்தவொரு சஹாபியும் இதனை மறுத்ததாக எந்த அறிவிப்பும் இல்லை. அந்த நேரத்தில் அனைத்து சஹாபாக்களும் இருந்திருந்தனர். அனைவரும் கேட்டு அமைதி அடைந்து விட்டனர். இதன் மூலம் சஹாபாக்கள் ஒன்றுபட்டு விட்டனர் என்பது நிரூபணமாகிறது. மேலும் சஹாபாக்களின் ஒப்புமை எவ்விதத்திலும் வழிகேட்டிற்குரியதாக இருக்காது. எனவே ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் இந்த உம்மத்திற்கு செய்த கருணையில் இதுவும் ஒன்றாகும். அதாவது இந்த உம்மத் வரக்கூடிய காலத்தில் நிகழக்கூடிய தவறிலிருந்து தப்பிப்பதற்காக தனது கிலாஃபத்தின் காலத்தில் உண்மையின் கதவினை திறந்து விட்டார்கள். மேலும் இதன் மூலம் வழிகேட்டின் வெள்ளத்தில் எவ்வாறான ஓர் தடுப்பினை ஏற்படுத்தி விட்டார்கள் எனில், இன்றைய காலத்து மவ்லவிகளுடன் அனைத்து ஜின்களும் இணைந்தால் கூட இந்த தடையை உடைக்க முடியாது. எனவே நாம் துஆ செய்கிறோம். அல்லாஹ் ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களது உயிரின் மீது ஆயிரக்கணக்கான ரஹ்மத்துகளைப் பொழியச் செய்வானாக. இது இறைவனின் தூய வஹியைப் பெற்று ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் மரணமடைந்து விட்டார்கள் என்பதை நிரூபித்துக் காட்டி விட்டது.

பிறகு மிகப்பெரிய குழப்பத்தை அகற்றுவதற்காக ஹஸ்ரத் அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்களின் உன்னதமான பணியைப் பற்றி **ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள இவ்வாறு கூறுகின்றார்கள்:**

அந்தக் காலத்திலும் கூட முஸைலமா குழப்பம் செய்வதற்காக பல மக்களை தன்னுடன் இணைத்து வைத்திருந்தான். அந்த நேரத்தில் ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் கலீஃபாவாக ஆனார்கள். எந்த அளவுக்கு கஷ்டங்கள் உருவாகியிருக்கும் என்பதனை மனிதன் நினைத்துப் பார்க்க முடியுமா? அவருடைய உள்ளம் ஆற்றல் மிகுந்த உள்ளமாக இருந்திருக்கவில்லை என்றால், ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் ஈமானுடன் இவர்களது ஈமான் இணைந்திருக்காவில்லை என்றால் மிக அதிகமான கஷ்டம் ஏற்பட்டிருக்கும். ஆனால் அபூபக்கர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிள் நிழலின் கீழ் இருந்தார்கள். அன்னாரின் உயர்ந்த நல்லொழுக்கத்தின் நல்ல தாக்கம் அவர்கள்மீது உருவானது. அவர்களது உள்ளம் நம்பிக்கையின் ஒளியால் நிரம்பியிருந்தது. இதனால்தான் தைரியம், பொறுமை, உறுதிப்பாட்டினை காட்டினார்கள். ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களுக்குப் பிறகு இதுபோன்ற உதாரணம் கிடைப்பது கடினமாகும். அவர்களின் வாழ்வு இஸ்லாமிய வாழ்வாக இருந்தது. எவ்வித நீண்ட வாதமும் செய்ய வேண்டிய அவசியம் ஏற்படாதது மிகத் தெளிவான விவகாரமாகும்.

அக்காலத்தின் நிலைமைகளைப் படியுங்கள். அதற்கு பிறகு இஸ்லாத்திற்கு ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் செய்த தொண்டுகளை சற்று நினைத்துப் பாருங்கள். நான் உண்மையாகவே கூறுகின்றேன். ஹஸ்ரத் அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்கள் இஸ்லாத்தின் இரண்டாவது ஆதம் ஆவார்கள் என்பதை நான்

நம்புகிறேன். அதாவது ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களுக்குப் பிறகு ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களின் தோற்றம் இல்லையென்றால் இஸ்லாமும் இருந்திருக்காது. ஸித்தீக்கின் இது மிகப் பெரும் கருணையாகும். அவர் இஸ்லாத்தை மீண்டும் நிலைநாட்டினார்கள். அதாவது ஈமானின் ஆற்றலைக் கொண்டு அனைத்து கிளர்ச்சியாளர்களுக்கும் தண்டனை வழங்கினார்கள். சமாதானத்தை நிலைநாட்டினார்கள். இவ்வாறே இறைவனும் கூறியுள்ளான். வாக்குறுதியும் அளித்துள்ளான். அதாவது நான் உண்மையான கலீஃபாவின் மூலம் அமைதியை வழங்குவேன். இந்த முன்னறிவிப்பு ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களின் கிலாஃபத்தில் முழுமையடைந்தது. வானமும் பூமியும் செயல்ரீதியாக சாட்சி பகர்ந்து விட்டது. இதுவே ஸித்தீக் என்ற பண்பின் விளக்கமாகும். அவரிடம் இந்த அளவிற்கு முழுமை வாய்ந்த சத்தியம் இருப்பது மிகவும் பொருத்தமானதாகும்.

பிறகு இரண்டாவது கலீஃபாவான ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் அந்தஸ்து ரஸூலை நேசித்தல் மற்றும் நேர்மை பற்றி **ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்.**

ஒருமுறை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் வீட்டிற்கு சென்றார்கள். அங்கு எந்தப் பொருளும் இல்லை என்பதைக் கண்டார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஒரு பாயின் மீது படுத்திருந்தார்கள். பாயின் தடமோ அவர்களது முதுகில் பதிந்திருந்தது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இந்நிலையைக் கண்டு அழத் தொடங்கினார்கள். உமரே! நீர் ஏன் அழுகிறீர்? என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கேட்டார்கள். உங்களது கஷ்டத்தைக் கண்டு எனக்கு அழுகை வந்து விட்டது. காஃபிராக இருக்கின்ற கெய்சர் மற்றும் கிஸ்ரா சொகுசான வாழ்க்கையை வாழ்கின்றார்கள். ஆனால் தாங்களோ இந்த கஷ்டத்தில் வாழ்வினை கழிக்கின்றீர்களா? என்றார்கள். அதற்கு ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள், எனக்கு இவ்வுலகத்துடன் என்ன வேலை இருக்கிறது? எனது உதாரணம் எவரைப் போன்றது என்றால் ஒருவர் அதிக வெப்பத்தின் போது ஒட்டகத்தில் செல்கிறார். மதிய வேளை வெப்பம் அவருக்கு அதிக கஷ்டத்தைத் தரும் போது அதே பயண நிலையுடன் இளைப்பாறுவதற்காக ஒரு மரத்தின் நிழலில் அமர்ந்து விட்டு, பிறகு ஒரு சில நிமிடங்களில் தனது பயணத்தை தொடர்வது போன்றதாகும் என்று கூறினார்கள்.

**ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் உயர்ந்த அந்தஸ்து சம்பந்தமாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் தர்ஜா சஹாபா பெருமக்கள் மத்தியில் எந்த அளவு உயர்ந்தது என்பது தெரியுமா? எந்த அளவுக்கென்றால், சில நேரங்களில் அவர்களின் கருத்திற்கிணங்க திருக்குர்ஆன் இறங்கியது. மேலும் அவர்கள் சம்பந்தமாக ஹதீஸிலும் உள்ளது. அதாவது ஷெய்த்தான் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் நிழலைக் கண்டு விரண்டு ஓடி விடுவான். எனக்கு பிறகு ஒருவர் நபி ஆவார் என்றால் அவர் உமராக இருப்பார் என்று மற்றொரு ஹதீஸில் வருகிறது. மூன்றாவது ஹதீஸில் இவ்வாறு வருகிறது. முந்தைய உம்மத்தில் முஹத்தஸ் வந்து கொண்டிருந்தார்கள். இந்த உம்மத்தில் ஒருவர் முஹத்தஸா இருக்கின்றார் என்றால் அவர் உமர் ஆவார்.

**பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் சம்பந்தமாக கூறுகின்றார்கள்:**

ஒரு சில முன்னறிவிப்புகள் ஒருமுறை மட்டுமே வெளிப்படுவதாக இருந்தது. அது படிப்படியாக வெளிப்படலாம் அல்லது மற்றவரின் வழியாகவும் வெளிப்படலாம். உதாரணமாக, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் ஒரு முன்னறிவிப்பான, ''கைஸர் மற்றும் கிஸ்ராவின் திறவுகோல் அன்னாரின் கையில் கொடுக்கப்படும்'' என்பதாகும். ஆனால் இந்த முன்னறிவிப்பு நிறைவேறுவதற்கு முன்பாகவே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மரணமடைந்து விட்டார்கள். ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் கைஸர் மற்றும் கிஸ்ராவின் கருவூலத்தைப் பார்க்கவில்லை. அதன் திறவுகோலையும் பார்க்கவில்லை. அந்த திறவுகோல் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு கிடைப்பதுதான் விதிக்கப்பட்டிருந்தது. ஏனென்றால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் தோற்றமானது நிழல் ரீதியில் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் தோற்றமேயாகும். எனவே வஹியின் நிலையில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கரங்கள் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் கரங்களாகக் கருதப்பட்டது.

**பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தொடர்ந்து கூறுகின்றார்கள்:**

ஒரு தலைமையின் அருள் முழுமையாக வழிகாட்டி பலன் தராத வரை ஆபத்துகளிலிருந்து பாதுகாப்பு கிடைப்பதில்லை. இவ்விஷயத்தின் காட்சி இஸ்லாத்தின் தொடக்கத்திலேயே காணப்படுகின்றது. ஏனென்றால் திருக்குர்ஆனை எழுதுபவராக இருந்த ஒருவருக்கு சில நேரத்தில் நுபுவ்வத்தின் ஒளிக்கு நெருக்கமாக இருந்ததால் திருக்குர்ஆனின் வசனம் அவருக்கு இறங்கியது. அதனை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களும் அதே சமயத்தில் எழுத நினைத்திருப்பார்கள். ஒருமுறை அவர் எனக்கும் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களுக்கும் இடையில் என்ன வித்தியாசம் உள்ளது? எனக்கும் இல்ஹாம் இறங்குகிறது என்று எண்ணியதால் அவர் அழிக்கப்பட்டார். மேலும் கபர் கூட அவரை தூக்கி வீசி விட்டது என்றும் எழுதப்பட்டிருக்கிறது.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கும் இல்ஹாம் இறங்கியது. ஆனால் அவர்கள் தன்னை ஒரு பொருட்டாகவே கருதியதில்லை. மேலும் வானத்தின் இறைவன் இப்பூமியில் ஏற்படுத்திய உண்மையான இமாமுடன் தன்னை இணைத்துக் கொள்ள விரும்பவில்லை. மாறாக தன்னை தாழ்த்தியவாறு ஒரு அடிமையாகவே கருதினார்கள். இதனால் இறைவனின் அருள் இமாமத்தின் பதவியை அவர்களுக்கு வழங்கியது. ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களுக்கு நிகராக தன்னை ஒரு தாழ்வானவராகக் கருதினார்கள். இதனால் அல்லாஹ் அருள் செய்தவாறு அவர்களை கலீஃபாவாக ஆக்கினான். இது நபியின் துணையாகவும் இருக்கிறது.

**பிறகு ஸிர்ருல் கிலாஃபத் என்ற நூலில் 326 ஆம் பக்கத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

எனது இறைவன் என் மீது வெளிப்படுத்தியிருக்கிறான். அதாவது ஹஸ்ரத் அபூபக்கர், உமர் ஃபாரூக், உஸ்மான் (ரிழ்வானுல்லாஹி அலைஹிம்) ஈமானில் மிக உயர்ந்த பதவியைப் பெற்றவர் ஆவார்கள். மேலும் நேர்வழியினைப் பெற்றவராகவும் திகழ்ந்தார்கள். மேலும் இவர்கள் அல்லாஹ் எவர்களுக்கு அருட்களை வழங்கியிருக்கிறானோ அவர்களை சார்ந்தவராவார்கள். மேலும் அவர்கள் குறிப்பாக அல்லாஹ்வின் அருள்களின் இருப்பிடமாகத் திகழ்ந்தார்கள். அறிஞர்களின் ஒரு மிகப்பெரிய கூட்டம் இவர்களின் சிறப்பிற்கு சாட்சியாகவும் உன்னத தன்மையை ஏற்றுக் கொண்டவர்களாகவும் உள்ளனர். அவர்கள் இறை திருப்திக்காக தமது நாட்டினை துறந்தார்கள். மேலும் எல்லா போர்க்களத்திலும் தயக்கமின்றி நுழைந்தார்கள். அவர்கள் கடும் வெப்பத்தையும் பொருட்படுத்தவில்லை. மேலும் குளிரின் கடுமையான இரவுகளையும் கண்டு கொள்ளவில்லை. போர் வீரர்களாக விளங்கி மார்க்கத்தின் வழியில் அடியெடுத்து வைத்துக் கொண்டே சென்றார்கள். இந்த வழியில் அவர்கள் எந்த உறவினர்களைப் பற்றியும் கவலைப்படவில்லை. எவரைப் பற்றியும் கவலைப்படவில்லை. ரப்புல் ஆலமீனுக்காக அனைத்தையும் விட்டு விடுவதற்கு தயாராகி விட்டார்கள். அவர்களின் அழகான செயல்களிலிருந்து நறுமணம் வெளிப்படுகின்றது. அவர்களின் விரும்பத் தகுந்த செயல்களிலிருந்து நறுமணம் வீசுகிறது. மேலும் இவைகளின் மூலம் அவர்களின் உயர் பதவிகளின் தோட்டம் அவர்களின் நற்செயல்களின் பக்கம் நம்மை வழிநடத்துகின்றன. அவர்களின் தென்றல் காற்றின் இனிமை அவர்களின் உயர் பதவியின் இரகசியத்தை நமக்கு அறிவிக்கிறது. மேலும் அவர்களின் ஒளி நம்மை சூழ்ந்துள்ளது. அவைகளின் வாசனை அவர்களின் நன்னடத்தையின் பக்கம் வழிநடத்திச் செல்லக்கூடியதாக இருக்கிறது.

**பிறகு ஓரிடத்தில் அன்னார் கூறுகின்றார்கள்:**

ஹஸ்ரத் ஸித்தீக் அக்பர் (ரலி), ஹஸ்ரத் ஃபாரூக் உமர் (ரலி), ஹஸ்ரத் ஸூன்னுரைன் (ரலி) அதாவது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி), ஹஸ்ரத் அலி முர்தலா (ரலி) இவர்கள் அனைவரும் உண்மையாகவே மார்க்கத்தின் பாதுகாவலர்களாக திகழ்ந்தார்கள் என்ற நம்பிக்கை மிகவும் அவசியமானதாகும். ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தின் இரண்டாவது ஆதமாவார். இதேபோன்று ஹஸ்ரத் உமர் ஃபாரூக் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் மார்க்கத்தில் உண்மையாளராக இல்லை என்றால், இன்று திருக்குர்ஆனின் ஒரு வசனத்தைக் கூட இது அல்லாஹ்வின் புறமிருந்து வந்ததுதான் என்று கூறுவதே சாத்தியமற்றதாக இருந்திருக்கும்.

பிறகு **ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள்**, ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் உயர்ந்த பதவி அந்தஸ்தைப் பற்றி கூறுகிறார்கள். இதுவும் ஸிர்ருல் கிலாஃபா பக்கம் 358 –ல் உள்ளது. இதன் மொழியாக்கம் இதுவாகும்.

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் இறையச்சமுடையவராகவும், பரிசுத்தமானவர் ஆகவும் திகழ்ந்தார். இவர் ரஹ்மானின் மிக அதிக நேசத்தைப் பெற்றவர்களை சார்ந்தவராக திகழ்ந்தார்கள். மேலும் நல்ல வம்சத்தைச் சார்ந்தவர்களாக இருந்தார்களா. மேலும் காலத்தின் தலைவர்களில் ஒருவராக இருந்தார்கள். வெற்றிவாகை சூடும் இறை சிங்கமாகவும், வலிமைபெற்ற இறைவனின் வீரராகவும் திகழ்ந்தார்கள். கொடை வள்ளலாகவும், தூய உள்ளத்தைக் கொண்டவராகவும் திகழ்ந்தார்கள். போர்க்களத்தின் மையப் பகுதியிலிருந்து விலகாத தைரியசாலியாகவும் திகழ்ந்தார்கள். அன்னாருக்கு நேர் எதிராக ஒரு பெரும் படைக்கூட்டம் இருந்தாலும் கூட அவர்கள் அதனை விட்டு நகர்வதில்லை. அவர்கள் கஷ்டமான வாழ்க்கையே வாழ்ந்து வந்தார்கள். மனித இனத்திற்கு தொண்டாற்றுவதில் உச்சநிலையை அடைந்திருந்தார்கள். மேலும் அன்னார் பொருள்களை வாரி வழங்குபவராகவும் துன்பங்களை அகற்றுவது, ஏழைகள், அனாதைகள், அண்டை வீட்டுக்காரர்களை கண்காணித்து வருவதில் முதன்மை ஆனவராகவும் திகழ்ந்தார்கள். மேலும் பல்வேற போர்களில் அன்னாரின் தைரியத்தின் செயல்பாடுகள் தென்பட்டன. அன்னார் வாள் மற்றும் ஈட்டியின் போரில் ஆச்சரியத்திற்குரிய திறமைகளுக்கு ஓர் உதாரணமாக திகழ்ந்தார்கள். அத்துடன் இனிமையாகப் பேசுபவராகவும், மிக மென்மையாகப் பேசுபவராகவும் திகழ்ந்தார்கள். மிக அழகாக பேசினார்கள். அன்னார் தனது பேச்சினை உள்ளத்தின் ஆழம் வரை சென்றடையச் செய்தார்கள். இதன் மூலம் சிந்தனையிலுள்ள கறைகளை அகற்றினார்கள். மேலும் உள்ளங்களை ஆதாரத்தின் ஒளியைக் கொண்டு பிரகாசப்படுத்தினார்கள். அன்னார் அனைத்து கலைகளிலும் வல்லவராக திகழ்ந்தார்கள். மேலும் எவரேனும் ஒருவர் ஏதேனும் விஷயத்தில் தேர்ச்சி பெற்றவராக இருந்தாலும் அவரும் அன்னாரின் அழகினால் ஈர்க்கப்பட்டார். அனைத்து சிறப்புகள் மற்றும் சொற்பொழிவுத் திறனில் முழுமை பெற்றவராகத் திகழ்ந்தார்கள். எவர் ஒருவர் அன்னாரின் இந்த சிறப்புகளை நிராகரிக்கின்றாரோ அவர் வெட்கக்கேடான வழியில் செல்பவராக இருக்கிறார்.

**பிறகு சஹாபா பெருமக்கள் அனைவரைப் பற்றியும் அன்னார் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

நான் மீண்டும் சஹாபாக்களின் நிலைமைகளை எடுத்துக்காட்டாக முன் வைத்து கூறுகிறேன். அவர்கள் ரஸூல் (ஸல்) அவர்கள் மீது ஈமான் கொண்டு தமது செயல்ரீதியில் காட்டி விட்டார்கள். பார்வையிலிருந்து மறைவாக இருக்கும் அந்த இறைவனை அவர்கள் தனது கண்களினால், ஆம் கண்களினால் ஆம் கண்களினால் பார்த்து விட்டார்கள். இல்லையென்றால் அவர் சமுதாயத்தை விடுவதற்கும், நாட்டினை துறப்பதற்கும் எந்த விஷயம் இவ்வனைத்திலிருந்து கவலையற்றவர்களாக இருக்கச் செய்தது. அவர்கள் இறைவன் மீது மட்டுமே நம்பிக்கை கொண்டிருந்தார்கள். ஓர் இறைவனின் மீது அவர்கள் நம்பிக்கை கொண்டு அவர்கள் வெளிப்படுத்திய வரலாற்றின் பக்கத்தைப் புரட்டிப் பார்த்தால் மனிதன் ஆச்சரியத்திற்கு உள்ளாக்கப்படுவான். அது ஈமானாக இருந்தது. ஈமான் மட்டுமாகவே இருந்ததே தவிர வேறெதுவுமில்லை. உலகவாதிகளின் திட்டம், சூழ்ச்சி இவர்களுக்கு எதிராக இருந்தது. இருந்தும் உலவாதிகள் வெற்றி பெற முடியவில்லை. அவர்களின் எண்ணிக்கை, செல்வம் அனைத்தும் அதிகமாக இருந்தபோதிலும் அவர்களிடம் ஈமான் இருக்கவில்லை. ஈமான் இல்லாததால் தான் அவர்கள் அழிந்தனர். அவர்களால் வெற்றியின் காட்சியைக் காண முடியவில்லை. ஆனால் சஹாபா பெருமக்கள் ஈமானின் ஆற்றலைக் கொண்டு அனைவரையும் வென்று விட்டார்கள். அவர்கள் ஒரு மனிதரின் குரலைக் கேட்டதும் அம்மனிதர் எழுத்தறிவற்ற நிலையில் வளர்ந்தும் கூட உண்மை மற்றும் நேர்மையில் பிரபல்யமானவராக இருந்தார்கள். அவர் நான் இறைவன் புறமிருந்து வந்திருக்கிறேன் என்று கூறியபோது, இதனைக் கேட்டவுடனேயே அவருடன் சேர்ந்து விட்டார்கள். மேலும் தம்மை மறந்தவர்களாக அவர்களை பின்பற்றி சென்றார்கள். நான் மீண்டும் கூறுகிறேன். அந்த ஒரு விஷயம் தான் அவர்களை இந்த நிலைக்கு மாற்றியது. அது ஈமானாகும். நினைவில் கொள்ளுங்கள். இறைவன் மீது ஈமான் கொள்ளுதல் மிகப்பெரும் விஷயமாகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் சஹாபா அல்லது குலஃபாயே ராஷிதீன் அல்லது ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் சந்ததிகளுடன் உள்ள தொடர்பு மற்றும் அவர்கள் மீது வெளிப்படுத்திய அன்பு ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் மீதுள்ள அன்பின் காரணமாகவே இருந்தது. நான் முன்பு கூறியது போன்று இதனை அன்னார் ஈமானின் ஓர் அடையாளமாகவே கருதி வந்தார்கள். மற்றோரிடத்தில் இதனை தெளிவுபடுத்தியவாறு கூறுகின்றார்கள்.

எமது ஈமான் பெரியோர்கள் மற்றும் இறை அடியார்களுக்கு கண்ணியம் அளிப்பதாகும். ஆனால் உரிய தகுதிகளை வழங்குவது அவசியமான ஒன்றாகும். கண்ணியமளிக்க வேண்டும். ஆனால் நல்லொருவருக்கு ஓர் அந்தஸ்து உள்ளது. அதற்கேற்ப இருக்க வேண்டும். எல்லையை மீறி தமக்குத்தாமே பாவியாகி விடும் அளவிற்கு ஆகிவிடக் கூடாது. மிகைப்படுத்துதலுடன் செயல்படக் கூடாது.

ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் மற்றும் பிற நபிமார்களை இழிவுபடுத்தும் விதமாக ஆகி விடக்கூடாது. அனைத்து நபிமார்களும் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் உட்பட அனைவரும் ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி) அவர்களின் பரிந்துரை மூலமாகவே இரட்சிப்பு பெறுவார்கள் என்று கூறுபவர் மிகைப்படுத்துதல் காட்டியுள்ளார் என்பதாகும்.

இதன் மூலம் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களுக்கும் அனைத்து நபிமார்களுக்கும் அவமரியாதை செய்யப்படுகிறது.

எனக்கு ஹஸ்ரத் அலி, ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி) அவர்களுடன் ஒரு நுட்பமான பந்தம் இருக்கிறது. இந்த இரகசியத்தை இரண்டு கிழக்கு, இரண்டு மேற்கின் ரப்பினைத் தவிர வேறெவரும் அறியமாட்டார்கள். மேலும் நான் ஹஸ்ரத் அலி மற்றும் அன்னாரின் இரு மகன்களுடன் அதிக நேசம் வைத்துள்ளேன். எவர் இவர்களுக்கு எதிரியாக இருப்பாரோ அவருக்கு நான் எதிரியாக இருப்பேன். மேலும் நான் கொடுமை இழைப்பவர்களை சார்ந்தவனில்லை. இறைவன் என்மீது வெளிப்படுத்தியதை புறக்கணிப்பது என்னால் முடியாத ஒன்றாகும். மேலும் நான் எல்லையை மீறி மிகைப்பாடு செய்பவனும் அல்லன். இதுவும் ஸிர்ருல் துலாஃபா வின் மொழியாக்கமாகும்.

**பிறகு இந்த பரக்கத்தை இன்னும் விளக்கியவாறு அன்னார் கூறுகின்றார்கள்:**

இஸ்லாத்திலும் யூத குணத்தை கொண்டவர்கள், இந்த வழியைக் கடைபிடித்து வந்தார்கள். தவறான எண்ணத்தை நம்பி ஒவ்வொரு காலத்திலும் தோன்றிய இறை அடியார்களுக்கு தீங்கிழைத்து வந்தார்கள். பாருங்கள். இமாம் ஹுஸைன் (ரலி) அவர்களை விட்டு விட்டு ஆயிரக்கணக்கான முட்டாள்கள் யஸீதுடன் இணைந்து கொண்டார்கள். மேலும் எப்பாவமும் அற்ற இந்த இமாமுக்கு கை மற்றும் நாவினைக் கொண்டு தீங்கிழைத்தார்கள் என்பதை பாருங்கள். இறுதியில் கொலை செய்ய வேண்டும் என்பதைத் தவிர வேறு எதையும் அவர்கள் விரும்பியதில்லை. காலம் காலமாக வந்த இமாம்களையும் நல்லடியார்களையும் முஜத்தித்தீன்களையும் துன்புறுத்தி வந்தார்கள். மேலும் காஃபிர், மார்க்கமற்றவர், நயவஞ்சகர் என்று கூறி வந்தனர். ஆயிரக்கணக்கான சத்தியவான்கள் இவர்களின் கரங்களால் துன்புறுத்தப்பட்டார்கள். இவர்களுக்கு காஃபிர் என்ற பெயரைக் கொடுத்தது மட்டுமல்லாமல், கொலை செய்வதற்கும், இழிவுபடுத்துவதற்கும், கைது செய்வதற்கும் முடிந்த அளவு முயற்சி செய்தார்கள். நமது காலமும் வந்தடைந்து விட்டது. 13 ஆம் நூற்றாண்டின் ஒவ்வொரு இடத்திலும் இவர்கள், 14 ஆம் நூற்றாண்டில் இமாம் மஹ்தி தோன்றுவார்; குறைந்தபட்சம் ஒரு மிகப்பெரும் முஜத்தித் தோன்றுவார் என்று கூறி வந்தார்கள். ஆனால் 14 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் முஜத்தித் தோன்றிய போது அல்லாஹ்வின் இல்ஹாம் மட்டும் அவருக்கு மஸீஹ் மவ்வூது என்ற பெயரை வைக்கவில்லை. மாறாக காலத்தின் குழப்பங்களும் இவரது பெயர் மஸீஹ் மவ்வூது என குரல் கொடுத்தன. இவரது பெயர் கூறப்பட்டதுமே கடுமையாக பொய்ப்படுத்தி வந்தார்கள். முடிந்த வரை அன்னாரை துன்புறுத்தி வந்தார்கள். மேலும் பல்வேறு சூழ்ச்சியால் அவரை அழிக்க முன்வந்தனர். எதிர்த்தார்கள். கஷ்டங்கள் கொடுத்து வந்தார்கள். அழிக்கவும் முற்பட்டனர்.

**பிறிதோரிடத்தில் கூறுகின்றார்கள்:**

நான் எழுதிய இந்த கஸீதாவில் இமாம் ஹுஸைன் (ரலி) அவர்களை சம்பந்தப்படுத்தி எழுதியதாவது, அல்லது ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களைப் பற்றி கூறியதாவது இது மனிதனின் வேலையல்ல. நல்லடியார்களை தீய வார்த்தையைக் கொண்டு பேசுபவர் கீழ்த்தரமானவராவார். நான் நம்புவது என்னவென்றால், ஒருவர் ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி) அல்லது ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை இழிவாகப் பேசி ஓரிரவு கூட அவரால் உயிரோடு இருக்க முடியாது. மன் ஆத லீ வலிய்யன் என்ற எச்சரிக்கைக்கேற்ப கையினால் அவரை பிடித்து விடுவான். எனவே வான விவகாரங்களை அறிபவன் இறைவனின் நுட்பமான செயல்களின் மீது சிந்திக்கிறவன் அருளுக்குரியவன் ஆவான்.

*மன் ஆத லீ வலிய்யன் ஃபகது அஸன்துஹூ பில் ஹர்ப் - எவர் எனது நேசரை எதிர்க்கிறாரோ அவருடன் நான் போரிடுவதற்கான அறிவிப்பை செய்து விட்டேன்* என்பது ஹதீஸாகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நான் எழுதும் ஒவ்வொன்றும் அல்லாஹ்வின் கட்டளை மற்றும் அவனது விருப்பத்துடனேயே எழுதுகிறேன்.

**பிறகு இன்னோரிடத்தில் கூறுகின்றார்கள்:**

எவரது செயல் அவரது ஈமானிற்கு சாட்சி பகர்கிறதோ அவரே மூஃமின் ஆவார். உள்ளத்தில் ஈமான் எழுதப்படுகின்றது. இவர்கள் அனைத்தையும் விட இறை திருப்திக்கு முன்னுரிமை வழங்குபவர்களாவார்கள். மேலும் தக்வாவின் மிகக் கடினமான வழியினை இறைவனுக்காக தேர்ந்தெடுத்துக் கொள்வார்கள். அவனின் அன்பில் தன்னை அழிந்து கொள்பராவார்கள். சிலையைப் போன்று இறைவனை வணங்குவதிலிருந்து தடுக்கின்ற அனைத்து விஷயங்களையும் அது நடத்தையின் நிலைமையாக இருந்தாலும் சரி, அல்லது நயவஞ்சகத்தின் செயலாக இருந்தாலும் சரி அல்லது சோம்பேறியாக இருந்தாலும் சரி இவ்வனைத்திலிருந்தும் இவர்கள் தம்மை மிகத் தொலைவில் எடுத்து கொண்டு செல்கின்றனர்.

ஆனால் பாக்கியமிழந்த அந்த யஸீதிற்கு இந்த சந்தர்ப்பம் எங்கு கிடைத்தது. உலக நேசம் அவனை குருடனாக்கி விட்டது. ஆனால் ஹுஸைன் (ரலி) அவர்கள் பரிசுத்தமானவராகவும், பரிசுத்தம் பெற்றவராகவும் திகழ்ந்தார்கள். எவ்வித சந்தேகமுமின்றி, எவரை அல்லாஹ் தனது கரங்களால் தூய்மைப்படுத்துகிறானோ தனது அன்பினை வழங்குகின்றானோ அக்கூட்டத்தினை அவர்கள் சார்ந்திருந்தனர்; சார்ந்திருக்கிறார்கள். எவ்வித ஐயமுமின்றி சுவர்க்கத்தின் தலைவர்களை சார்ந்தவராகத் திகழ்ந்தார்கள். இவ்வாறு இருப்பவரின் மீது சிறிதளவு கூட குறை கூறுவது ஈமானை அழித்துக் கொள்வதற்கு சமமாகும். இந்த இமாமின் தக்வா, இறைநேசம், பொறுமை, உறுதிப்பாடு, பரிசுத்தம், இபாதத் இவை அனைத்தும் நமக்கு ஒரு நல்ல முன்மாதிரியாகும்.

நாம் அவர்களுக்கு கிடைத்த அந்த ஹிதாயத்தினை பின்பற்றக் கூடியவர்களாக உள்ளோம். எவரது உள்ளம் இவரின் எதிரியாக இருக்கிறதோ அது அழிந்து விட்டது. எவரது உள்ளம் அவர் மீதுள்ள நேசத்தினை அமுல்படுத்திக் காட்டுகிறதோ அது வெற்றி பெற்று விட்டது. அப்படிப்பட்டவரது ஈமான், நன்னடத்தை, தைரியம், தக்வா, உறுதிப்பாடு மற்றும் இறை நேசத்தின் அனைத்து பிம்பமும் பிரதிபலித்து முழு கீழ்படிதலுடன் தன்னுள் கவருகின்றது. எவ்வாறு ஒரு தெளிவான கண்ணாடியில் ஓர் அழகான மனிதனின் பிம்பம் தெரியுமோ அவ்வாறு தென்படும். இவ்வாறானவர்கள் உலக கண்களிலிருந்து மறைந்துள்ளனர். அவர்களின் கண்ணியத்தை எவரால் அறிய முடியும். ஆனால் அவரை சார்ந்தவர்களாலேயே அறிய முடியும். ஏனென்றால் அவர்கள் உலகத்தை விட்டு விட்டு தொலைவில் உள்ளனர். இதுவே ஹஸ்ரத் ஹுஸைனின் ஷஹாதத்திற்கு காரணமாக அமைந்தது. ஏனென்றால் அவர் அறியப்படவில்லை. உலகம் எந்த அடியார்களைத்தான் அவர்களின் காலத்தில் ஏற்றுக் கொண்டது. ஹஸ்ரத் ஹுஸைனை ஏற்றுக் கொள்வதற்கு இந்த காரியமானது ஈமானற்ற

செயல்களைச் சார்ந்தவையாகும். அதாவது ஹுஸைன் (ரலி) அவர்களை அல்லது வேறு ஏதேனும் பரிசுத்த இமாம்களை இழிவுபடுத்துகிறாரோ அல்லது அவரைப் பற்றி தீய வார்த்தைகளை தமது நாவினைக் கூறுகிறாரோ அவர் தனது ஈமானை வீணடிக்கிறார். ஏனென்றால் எவர் அல்லாஹ்வின் நல்லடியார்களின் எதிரியாகி விடுகிறாரோ, அவரிடம் அல்லாஹ் ஜல்ல ஷானஹு –வும் எதிரியாகி விடுகிறான்.

எனவே இந்த போதனைத்தான் நீதி, நேர்மையை உள்ளடக்கிய போதனையாகும். மேலும் முஸ்லிம்களை ஒரே கையில் ஒன்றிணைப்பது, மற்றும் பிரிவினையை ஒழிக்கும் போதனையாகும். இதனை அல்லாஹ்வினால் அனுப்பப்பட்ட நல்லடியார்கள் நமக்கு வழங்கியுள்ளார்கள். அவர் இக்காலத்தில் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் உண்மை அடியானாக திகழ்ந்து சமாதானம் மற்றும் சந்ததியின் தூதை எடுத்து வந்தார்கள்.

அல்லாஹ் இந்த உம்மத்திற்கு இப்போதனையை புரியும் நல்வாய்ப்பினை தந்தருள்வானாக. பிரிவினைகள் மற்றும் குழப்பங்கள், ஒருவர் மற்றவரை கொலை செய்வதிலிருந்து பாதுகாப்பானாக. இதனால் இஸ்லாம் ஒரு புதிய பொலிவுடன் உலகத்தின் எல்லை வரை தனது பொலிவை காட்ட வேண்டும். அல்லாஹ் இந்த முஹர்ரம் மாதத்தினை அனைத்து இடங்களிலுள்ளவர்களையும் சாந்தி சமாதானத்துடன் கடக்கச் செய்வானாக. ஒரு முஸ்லிம் மற்ற முஸ்லிமை தனது கை மற்றும் நாவிலிருந்து பாதுகாக்கக் கூடியவர்களாக ஆகட்டுமாக. முஸ்லிம் நாடுகளின் பொதுவான நிலை மேலும் குழப்பங்களிலிருந்து பாதுகாப்பு பெறவும் அதிகமாக துஆ செய்யுமாறு இன்றைய காலகட்டத்தில் பல நாடுகள் தீய நிலைமைகளை கடந்து கொண்டிருக்கிறது. அல்லாஹ் தீய விளைவுகளை உருவாக்கக் கூடிய அனைத்து தீயதிலிருந்தும் இஸ்லாம் மற்றும் முஸ்லிம்களை காப்பாற்றுவானாக. நான் கூறியது போன்று பெரும்பான்மையான முஸ்லிம் நாடுகளில் உள்நாட்டு குழப்பங்களும் இருக்கின்றன. இதனால் அங்கு அமைதி சீர்குலைகிறது. முன்னேற்றத்திற்குப் பகரமாக விரைவாக பின்தங்கி செல்கின்றனர். உலகின் பொதுவான பொருளாதார வீழ்ச்சியும் கூட சீர்குலைவை ஏற்படுத்துகிறது. மேற்கத்திய நாடுகளில் இதனின் தாக்கம் கடுமையாக ஏற்பட்டுள்ளது. முஸ்லிம் நாடுகள், கிழக்கத்திய நாடுகள் என அனைத்து நாடுகளிலும் அதன் தாக்கம் ஏற்பட்டுள்ளது. பிறகு மூன்றாவது ஓர் மிகப்பெரும் நிலை ஒன்று உருவாகிறது. இது வெளிப்படையாக தெரிய வருகிறது. அதாவது உலகப் போரினை நோக்கி உலகம் மிக விரைவாக சென்று கொண்டிருக்கிறது. அல்லாஹ் மனித குலம் மீது கருணை காட்டுவானாக. மேலும் புரியும் தன்மையை வழங்குவானாக. நாமும் இன்றைய நாட்களில் அதிகமாக துஆ செய்ய வேண்டும்; பல்வேறு வகையில் முன்னேற்பாடான திட்டத்தையும் வகுக்க வேண்டும். அல்லாஹ் நமக்கு உதவி புரிவானாக!

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**

**HADHRAT KHALIFATUL MASIH V**

**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**

**ON 02.12.2011**

Translated by : Maulavi R. AHMAD ABDULLAH

Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA

ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456